**எம்பிலிபிட்டிய நகர சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 01. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 16 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 மே 23 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு எம்பிலிபிட்டிய நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானத்தை சீராக்கல் செய்யும் போது அப் பெறுமதி ரூபா 34,400 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நடைமுறை சொத்துக்கள் அதே தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) பல்லேகம பஸ் தரிப்பிட தற்காலிக கடைகளுக்கான வாடகை, மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு ரூபா 1,542,800 இற்கான நிலுவை தொகையொன்று காணப்பட்ட போதிலும் அத் தொகையினை கடந்த ஆண்டின் போது இனங்கண்டு கணக்கீடு செய்யாமல் மீளாய்வாண்டிற்கான நிலுவையுடன் சீராக்கல் மேற்கொண்டு சமப்படுத்தியமையினால் கணக்கின் மீதியாகிய ரூபா 1,888,900 தொகை பெறவேண்டிய வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பெறவேண்டிய வருமானம் ரூபா 346,100 தொகையினால் மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது நன்கொடையாகக் கிடைத்திருந்த ரூபா 20,050,000 தொகைக்கான வாகனங்களை நன்கொடை ஒதுக்கம் என கணக்கீடு செய்யப்பட வேண்டும் எனினும், அப் பெறுமதி மூலதனச் செலவீட்டிற்கான அரசிறை உதவுத் தொகைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் இருந்த அனுப்பியிருந்த மீதியை உறுதிப்படுத்தல்களின் படி மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கடன் மீதி ரூபா 19,069,621 தொகை எனினும், பேரேட்டுக் கணக்கின் பிரகாரம் அம்மீதி ரூபா 18,560,436 தொகையாகக் காணப்பட்டமையால் வெளிப் பொறுப்புக்கள் ரூபா 509,185 இனால் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(உ)(i) பல்லேகம பொதுச் சந்தை கடை வாடகை 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 930,800 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்ட போதிலும் அதனை அவ் வருடக் கணக்குகளில் ஆரம்ப மீதியொன்றாகக்

காட்டப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டின் போது அக் கணக்குகளை சமநிலைப்படுத்தி மீதியாகிய ரூபா 553,900 தொகையை மாத்திரம் நாட்குறிப்பு இலக்கம் 34 இன் மூலம் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. மேலும் ரூபா 376,900 தொகை ஆரம்ப நிலுவை மீதியொன்றாக சீராக்கல் செய்யப்பட வேண்டியிருந்ததுடன் அதன் பிரகாரம் அதே தொகையால் நடைமுறை சொத்துக்கள் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டிற்கான புதிய நகர சந்தை கடைகளுக்கான சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 757,600 தொகையாகக் காணப்பட வேண்டுமெனினும், பொதுச் சந்தை கடைகளுக்கான பேரேட்டுக் கணக்கை சமநிலைப்படுத்திய பின்னர் காணப்பட்ட வித்தியாசம் ஆகிய ரூபா 878,340 தொகை புதிய நகர பொதுச் சந்தைக் கடைகளின் சிட்டையிடப்பட்ட வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 120,740 தொகையினால் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது.

(ஊ) மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்ட வீதவரி முற்பெறுவனவு பெறுமதி வீதவரி பதிவேட்டின் பிரகாரம் ரூபா 155,713 தொகை எனினும், அதனை நிதிக்கூற்றின் மூலம் ரூபா 30,664 தொகையென காட்டப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 125,049 தொகை அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் அதே தொகையால் பொறுப்புக்களின் மீதி குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

06 கணக்கு விடயங்களுடன் தொடர்புடைய மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் மற்றும் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மீதிகளின் வித்தியாசம் ரூபா 541,447 தொகையாக இருந்தது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

06 நிர்மாண வேலைகள் நிறைவேற்றுவதற்காக மற்றும் கொங்கிரீட் அச்சுக்கல் தரப் பரிசோதனைக்காக 2010 மற்றும் 2013 ஆண்டுகளின் போது ரூபா 721,567 இற்கான முற்பணம் நகர சபையினால் செலுத்தப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2015 நவம்பர் 26 திகதி வரை குறிப்பிட்ட முற்பணங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) பிரிவு இலக்கம் 159(ஊ) | நகர வரவேற்பு மற்றும் பொது நலனுக்கு அல்லது ஏதேனும் மதம்சார், தர்ம உதவி, பண்பாட்டு, சுகாரதார, பொழுதுபோக்கு அல்லது கல்விசார் நிகழ்வுகள் தொடர்பாக அமைச்சரின் எழுத்துமூலமான அங்கீகாரத்துடன் சபையினால் செலவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும் அவ்வாறான அங்கீகாரம் இன்றி மீளாய்வாண்டின் போது ரூபா 95,000 இற்கான செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ஆ) | உள்ளூராட்சி ஆணையாளரின் 2012 மே 29 திகதிய இலக்கம் 03/2012 கொண்ட சுற்றறிக்கை | மக்கள் பிரதிநிதிகளுக்காக எரிபொருள் படி செலுத்தும் போது முதலில் முற்பணம் செலுத்தி பின்னர் அதனை மீளளிப்புச் செய்யும் அடிப்படையில் செலுத்தப்பட வேண்டு மெனினும், சமர்ப்பிக்கப்படும் சிட்டைகளின் அடிப்படையில் எரிபொருள் படி செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாண இலக்கம் 317(2) | வழங்கப்பட்ட கருமம் முடிவடைந்தவுடன் முற்பணங்கள் தீர்க்கப்பட வேண்டும். எனினும் 2007 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை கூட்டுத்தொகை ரூபா 1,122,292 இற்கான முற்பணங்களைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 25,367,723 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 21,178,284 ஆகும்.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி செயற்பாட்டு மிகை ரூபா 4,189,439 இனால் அதிகரித்திருந்ததுடன் அது முன்னைய ஆண்டை விட 20 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது என அவதானிக்கபட்டது. இதற்கு முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் மீண்டுவரும் வருமானங்களில் அதிகரிப்பு மற்றும் மீண்டுவரும் செலவுகளில் குறைதல் முக்கியமாக பாதித்திருந்தது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட | உள்ளவாறான | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீத வரி மற்றும் வரி | 18,195 | 17,883 | 31,630 |
| வாடகை | 10,867 | 13,033 | 3,611 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 3,496 | 1,513 | 1,256 |
| ஏனைய வருமானங்கள் | 38,446 | 36,956 | 1,490 |

### 2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் இணக்கஞ் செய்யும் போது வீதவரியும் வரியும், அனுமதிப்பத்திரக் கட்டணம், சேவைக்கான கட்டணம் மற்றும் ஏனைய வருமானங்கள் ஆகிய வருமான விடயங்கள் சேகரித்த வருமானம் மதிப்பீட்டு வருமானத்தை விட முறையே 17 சதவீதம், 57 சதவீதம், 22 சதவீதம் மற்றும் 11 சதவீதத்திற்காக குறைவடைதல் காணப்பட்டது.

### 2.3.3 வீத வரி

மீளாய்வாண்டிற்காக சபைக்கு கிடைக்க வேண்டிய நிலுவை வீத வரி ரூபா 31,630,167 தொகையாகக் காணப்பட்டதுடன், நிலுவை வீதவரி மீதி வருடாந்தம் அதிகரித்துச் செல்வதாக அவதானிக்கப்பட்டது. தற்போது காணப்படும் கணனி முறையில் சிக்கல் காரணமாக நிலுவை வீதவரியின் பெறுமதி தொடர்பாக காலப்பகுப்பாய்வு ஒன்றினை பெறுவதற்கு இயலாத நிலைமை ஒன்று ஏற்பட்டிருந்தது.

### 2.3.4 ஏனைய வருமானங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது விளம்பர அறிவித்தல் பலகைகள் காட்சிப்படுத்திய 27 நிறுவனங்களில் இருந்து ரூபா 346,148 தொகை வருமானம் ஒன்றினைப் பெற்றிருந்ததுடன், குறிப்பிட்ட சாரார் சபைக்கு வந்து செலுத்தும் கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்வதைத் தவிர அதற்கு அப்பால் அக் கட்டணத்தை அறவீடு செய்வதற்காக பொறுத்தமான வேலைத்திட்டம் ஒன்று அல்லது அங்கீகாரமற்ற அறிவித்தல் பலகைகளை அகற்றுவதற்காக போதியளவு நிகழச்சித் திட்டமொன்று சபையினால் செயற்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) பல்லேகம பஸ் தரிப்பிடத்தின் கட்டணங்கள் அறவீடு செய்வதற்காக துணை விதிகள் ஆக்குவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 2014 மற்றும் 2015 ஆண்டுகள் தொடர்பாக இந்த வருமான வழியின் மூலம் எதுவித வருமானமும் சபைக்குக் கிடைத்திருக்காததுடன் சபையின் உத்தியோகத்தர் ஒருவரை ஈடுபடுத்தி வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையுடன் நேரடியாக தொடர்புகளை ஏற்படுத்தி கட்டணம் அறவீடு செய்வதற்காக முறையான வேலைத்திட்டமொன்று செயற்படுத்தியிருக்கவில்லை.

(இ) 2015 ஆண்டின் போது வாடகைக்குக் கொடுத்திருந்த புதிய நகர வாராந்த சந்தை, பல்லேகம 03 ஆம் இலக்க கடை மற்றும் வாகனத் தரிப்பிர கட்டணம் ஆகிய 03 வருமான வழிகளின் வாடகையாளர்கள் குறிப்பிட்ட வரி உடன்படிக்கையில் இருந்து விளகியமையால் உடன்படிக்கைகள் இரத்துச் செய்யப்பட்டிருந்த போதிலும் மீண்டும் கேள்விகளை அழைத்து வாடகைக்குக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையால் 2015 அக்தோபர் 31 ஆம் திகதி வரை ரூபா 1,363,321 இற்கான வருமானம் ஒன்றினை சபை இழந்திருந்தது.

(ஈ) பல்லேகம பொதுச் சந்தையில் 12 கடைகளில் இருந்து மற்றும் பல்லேகம பஸ் தரிப்பிட தற்காலிக கடைகள் 37 இல் இருந்து 2015 நவம்பர் 27 திகதியில் உள்ளவாறு முறையே ரூபா 358,700 மற்றும் ரூபா 2,732,300 இற்காக வாடகை அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் கடைகளை வாடகைக்கு கொடுத்தல் தொடர்பாக வாடகை உடன்படிக்கையும் செய்திருக்கவில்லை.

**2.3.5 புதுச் சந்தை கடைகளை வாடகைக்குக் கொடுத்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்ளூராட்சி ஆணையாளரின் 2009 மார்ச் 09 ஆந் திகதிய 2009/01 கொண்ட சுற்றறிக்கையின் மூலம் பழைய சந்தையின் கட்டிடமொன்றினை அகற்றி புதிய சந்தையொன்று நிர்மாணிக்கும் சந்தர்ப்பத்தில் அக் கடைகளை வாடகைக்கு கொடுப்பதற்கு முன்னர் ஒரே முறையில் செலுத்தும் பணத்தினை தீர்மானிக்கும் முறையினை குறிப்பிட்டிருந்த போதிலும் பழைய சந்தையை அகற்றி நிர்மாணிக்கப்பட்ட புதிய நகர பொதுச் சந்தையின் 30 நிரந்தர கடைகளில் குறைந்த பட்சம் செலுத்தும் தொகையென ரூபா 100,000 பழைய கடை வாடகையாளர்களினால் செலுத்தப்பட வேண்டுமென சபையினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் அக் கடைகளுக்காக 2015 ஏப்ரல் 06 திகதிய பிரதான பெறுமதி மதிப்பீட்டாளரின் பெறுமதி மதிப்பீட்டின் மீது ஒரே முறையில் செலுத்தும் பணம் தீர்மானிக்கும் சந்தர்ப்பத்தை தவிர்த்து குறைந்த பட்சத் தொகையை சபை தீர்மானித்திருந்தமையால் சபைக்கு ரூபா 8,232,000 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(ஆ) மேற் கூறிய கடைகளில் 26 கடைகளின் வாடகையாளர்கள் சபையுடன் உடன்படிக்கை மேற்கொண்டிருக்கவில்லை எனவும் அந்த 26 கடைகளில் 11 கடைகளுக்காக மாத்திரம் 2015 ஆம் ஆண்டிற்காக மாதாந்த வாடகை செலுத்தப்பட்டிருந்ததெனவும் 12 ஆம் 13 ஆம் இலக்க கடைகளுக்காக உரிமை கோருவதற்கு பழைய சந்தை கடை வாடகையாளர்கள் எவரும் முன்வந்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்படாத மற்றும் மாதாந்த வாடகை செலுத்தாத குறிப்பிட்ட கடைகளில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனரா என்பது தொடர்பாக தகவல்கள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்படாததுடன் மாதாந்த வாடகை செலுத்தப்படாத அல்லது வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடாத பழைய கடை வாடகையாளர்களினால் பெற்றுக்கொள்ளாத கடைகளை மீண்டும் கேள்வி அழைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.3.6 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரை கட்டணம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

(அ) 2014 மே 01 திகதி முதல் 2015 திசெம்பர் 31 திகதி வரை எம்பிலிபிட்டிய நீதிவான் நீதிமன்றத்தில் இருந்து பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 1,550,271 இற்கான நீதி மன்றத் தண்டப் பணம் தொடர்பான பட்டோலை தருவித்திருந்த போதிலும், அப் பணத்தை அறவீடு செய்வதில் தாமதம் காணப்பட்டது.

(ஆ) 2014 ஏப்ரல் 01 முதல் 2015 மார்ச் 31 வரையான காலப் பகுதிக்கான பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 1,695,437 தொகைக்கான முத்திரைக் கட்டண பட்டோலைகள் கிடைத்திருந்த போதிலும் அப் பணம் மாகாண சபையினால் செலுத்துவதில் கால தாமதம் காணப்பட்டது.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான பொருட்கள் மெய்மையாய்தல் தொடர்பாப பொருட்கள் மெய்மையாய்தல், சபை விதப்புரைகளை உரிய முறையில் செயற்படுத்தியிருக்காததுடன், கடந்த பல வருடங்களின் மெய்மையாய்தல் சபை விதப்புரைகளை செயற்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆண்டு முதல் கணக்காய்வுத் திகதியாகிய 2015 நவம்பர் 27 ஆம் திகதி வரையும் சேவையை இராஜினாமா செய்த 04 உத்தியோகத்தர்களின் மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்றும் 04 உத்தியோகத்தர்களின் ஊழியர் பிணைப் பணம் ரூபா 42,292 தொகையினை குறிப்பிட்ட அலுவலர்களின் அறவீடுகள் ஏதும் இருப்பின் அறவீடு செய்த பின்னர் குறிப்பிட்ட பிணைகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) புதியநகர வாராந்த சந்தை வாடகைக்கு பெற்றிருந்த வாடகையாளர்களிடம் 2015 ஏப்ரல் மாதத்திற்காக மாதாந்த வாடகையாக ரூபா 684,012 தொகையினை 2015 செப்தெம்பர் 10 திகதியில் வைப்புத் தொகையிலிருந்து சமநிலைப்படுத்தி மீதி வைப்பு தொகையாகிய ரூபா 1,000,000 தொகையினை திருப்பி செலுத்தியிருந்தது. எனினும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் பெறுமதி கூட்டிய வரியில் இருந்து சபையினை விடுவித்திருந்த காரணத்தினால் குறிப்பிட்ட காலப் பகுதி தொடர்பான பெறுமதி கூட்டிய வரி ரூபா 55,001 தொகையினை சமநிலைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. எனினும் குறிப்பிட்ட காலப் பகுதியிலேயே அவ் வரியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் திருப்பிச் செலுத்தப்பட்ட பெறுமதி கூட்டிய வரி ரூபா 55,001 தொகை அரசுக்கு ஏற்பட்டுள்ள நட்டம் ஒன்று என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) சபையின் ஒவ்வொரு வாகனத்தினதும் பொறுப்பினை வாகனத்தின் பொருட் பதிவேட்டுடன் முறையான விதமாக எழுத்துமூலமாக சாரதிக்கு சாட்டப்பட்டிருக்கவில்லை எனவும், சபையின் வாகனங்களில் பொறுத்தப்பட்டிருந்த அல்லது பின்னர் பொருத்தப்பட்ட மேலதிக உதிரிப் பாகங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக போதியளவு விவரங்களை அடங்கிய பதிவேடு ஒன்று அல்லது வாகனப் பொருட் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. மேலும், சபைக்குச் சொந்தமான முறையாக உரித்தாக்கப்படாத 05 வாகனங்கள் தொடர்பான பதிவுச் சான்றிதழ்கள் என்பன சபையில் காணப்படவில்லை என கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(ஈ) நகரத்தின் வடிகால் முறைமைக்காக உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து 2012 ஆண்டின் போது பெற்றிருந்த ரூபா 10,435,506 தொகைக்கான கடன் தொகை அவ் ஆண்டுகளில் இருந்தே செலுத்துவதை புறக்கணித்திருந்தது. இதன் பிரகாரம் புறக்கணித்திருந்த தொகை தொடர்பாக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு மீளமைப்புச் செய்யப்பட்ட ரூபா 5,147,339 தொகையான வட்டித்தொகையினை கடன்தொகையென கணித்து மீளாய்வாண்டின் போது நாட்குறிப்பு இலக்கம் 23 இன் மூலம் உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டு திரண்ட நிதியத்திற்கு வரவு

வைக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் ஒவ்வொரு வருடங்களிலும் கடன்கொடுத்தோருக்காக ஒதுக்கி குறிப்பிட்ட வருடத்தின் செலவுகளுடன் சீராக்கல் செய்யப்படாமையால் திரண்ட நிதிக் கணக்கின் மீதி ஒரே தடவையில் கூடிய தொகையொன்றினை குறைவாகக் காட்டுவதற்கு காரணமாக அமைந்திருந்தது.

### 3.2 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நகர சபைக்குச் சொந்தமான பால் விற்பனை நிலையத்தையும் பண்டங்களையும் மீளாய்வாண்டிற்காக வாடகைக்கு கொடுத்தல் தொடர்பான கேள்வி விண்ணப்பத்தில் கேள்வி நிபந்தனை இலக்கம் 35 மற்றும் 2015 ஆண்டிற்கான வாடகையாளருடன் மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் பால் உற்பத்திக்கு முக்கியத்துவமளித்து வர்த்தக நிலையத்தை நடத்த வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் பால் மற்றும் பாலைச் சார்ந்த உற்பத்திப் பொருட்களின் விற்பனை பெயர் பலகைக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டு காணப்பட்டது எனவும் வேறு வர்த்தக நோக்கங்களுக்கு இந்த வர்த்தக நிலையம் பயன்படுத்தப்படுகின்றது எனவும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) சப்ரகமுவ மாகாண கால் நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் மற்றும் நகர சபையுடன் பால் உற்பத்தி விற்பனைக்காக வழங்கியிருந்த பண்டங்களுக்காக உடன்படிக்கை ஒன்று மேற்கொண்டிருந்த போதிலும் அந்த வர்த்தக நிலையத்தை நடாத்தப்படாமையால் அப் பண்டங்கள் மீண்டும் அத் திணைக்களத்தினால் உரித்தாக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் உரித்தாக்கப்பட்ட பண்டங்களுக்காக மாதாந்தம் ரூபா 2,000 தொகையான வாடகை கழித்து மாதாந்த வாடகை ரூபா 60,310 தொகை என பணம் செலுத்துவதற்கு வாடகையாளருக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

### 3.3 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

பொது நிருவாக மற்றும் மாகாண சபை அமைச்சில் இருந்து வழங்கியிருந்த WPZA-5296 ஆம் இலக்க மோட்டார் கிரேடர் மற்றும் WPZA-5222 இலக்கம் கொண்ட பெக்கோ இயந்திரம் என்பன தற்போது அவ் இயந்திரங்களை இயக்குவதற்காக ஊழியர் ஒருவர் இன்மையால் சபை வளவில் விளைவற்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

### 3.4 ஒப்பந்த நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபை மண்டபத்தை மற்றும் தலைவரின் அறையினை வாயு சீராக்குவதற்கான ரூபா 438,500 இற்கான தொகையொன்று இலங்கை அரச வர்த்தக (நானாவித) கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தியிருந்த போதிலும் அவ் வழங்கல்கள் தொடர்பாக குறிப்பிட்ட பண்டங்களின் தரம் மற்றும் நியமங்கள் தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு உறுதிப்படுத்துவதற்காக தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டு அதன் மூலம் அல்லது தொழிநுட்ப உத்தியோகத்தர் அல்லது இது தொடர்பான விஷேட அறிவுடைய ஒருவரின் மூலம் விதப்புரை பெற்றிருக்கவில்லை.

(ஆ) வாயு சீராக்கல் முறைமையினை பொருத்தும் போது அவ் அறைகளில் இருந்து குளிர்ந்த வாயு வெளிச்செல்லாத வகையில் உற்பகுதியில் வாயு சீராக்கல் முறைமையை சுவர்களில் பொருத்த வேண்டுமெனினும் 04 இயந்திரங்களைக் கொண்ட சபை மண்டபத்தில் பொருத்தப்பட்ட வாயு சீராக்கல் முறைமை யன்னல் கிரீல் மற்றும் வெளியில் பொறுத்தப்பட்டிருந்த கண்ணாடித் துண்டினை துளைத்து அதன் மூலம் வாயு சீராக்கல் குழாய் எடுக்கப்பட்டிருந்தமையால் மற்றும் சபை மண்டபத்தில் காணப்படும் கதவுகளை மூடி வைப்பதற்கு இயலுமாக சுயமாக

செயற்படும் கதவுகளை மூடக்கூடிய உபகரணங்கள் பொருத்தப்படாமையால், ஒரு யன்னல் மூடியினை உரிய முறையில் மூடுவதற்கு முடியாமையால் குளிர்ந்த காற்று வெளியே செல்லும் நிலைமை ஒன்று அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் வாயு சீராக்கிய அறைகளில் உரிய முறையில் குளிர்ந்த தன்மையை தடுத்து வைக்க முடியாமையினால் வாயு சீராக்கல் இயந்திரங்களின் மூலம் எதிர்ப்பார்த்த வினை திறமையினை பெற்றுக் கொள்ள இயலாமை, தேவையற்ற விதமாக மின்சாரம் வீணாக்குவது நடைபெறுவதாக அவதானிக்கப்பட்டது.

## 04. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் போது நிகழ்ச்சித் திட்ட இலக்கம் 04 இன் கீழ் ரூபா 312,500 இற்கான வருமான மதிப்பீடு ஒன்று மற்றும் ரூபா 327,600 இற்கான செலவு ஒன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது எதுவித செயற்பாடுகளும் நடைபெற்றிருக்கவில்லை.

### 4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

மீளாய்வாண்டிற்கான வருடாந்த பெறுகைகள் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஒன்று நிறுவி அதற்கு போதிய வசதிகள் வழங்கி செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுத்தல்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவப்பட்டு செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 4.5 தீர்க்கப்பட்டிருக்காத மற்றும் பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கணக்கிடக் கூடிய பெறுமதியாகிய ரூபா 150,000 இற்கான ஒரு கணக்காய்வு ஐய வினாவிற்கு பதில் அனுப்பியிருக்கவில்லை.

## 05. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) ஒப்பந்த நிருவாகம்